**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>**

**முன்னிலை:– திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் புரட்டாசித் திங்கள் 10–ம் நாள்
2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.3/2024
இன்
அசல் வழக்கு எண்.29/2024
(CNR.No.TNTR21-000039-2024)
...

1. D. கந்தன்
2. D. சேகர் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1. V. லட்சுமி
2. V. நாராயணசாமி
3. V. கண்ணகி
4. V. பிரசாந்த்
5. V. ஹரிகரன்
6. M. ரம்யா
7. V. கற்பகம்
8. V. தேசம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு கடந்த 12.09.2024 ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. கார்த்திகேயன், E. தணிகைராஜ், ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் C.N. நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுச் சொத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் மேற்படி சொத்தின் இயற்கை அமைப்பு, அனுபவம் மற்றும் தற்போதைய உரிமை குறித்து வரைபடத்துடன் கூடிய விரிவானதொரு அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 26 விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>மனுவின் சுருக்கம்:–</u>**

(அ) எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நிரந்தர உறுத்துக் கட்டளைப்

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.26 10:50:20 +0530

பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பழைய ஆவணங்கள், பழைய பட்டா ஆகியவைகளில் இந்த பிரதிவாதியின் பெயரும் உள்ளது என்ற உண்மையை வாதிகள் மறைத்து உள்ளனர். கூட்டுப்பட்டாதாரர்களுக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அது மனுதாரருக்கு மனவலியை அளிக்கிறது. மனுதாரர் 1433 பசலிக்கான அடங்கல் தாக்கல் செய்துள்ளார். மனு சொத்தில் இந்த மனுதாரர் பூச்செடி, நெல் மற்றும் கால்நடை தீவனம் ஆகியவற்றை விவசாயம் செய்து வருகிறார்.

(ஆ) 1966ம் ஆண்டில் 1ம் வாதியின் சொந்த சகோதரான துரைச்சாமி ரெட்டி சில விவசாய நிலங்களை வாங்கி அது 1ம் வாதியின் கணவர் வெங்கடேச ரெட்டியின் பாகத்திற்கு வந்து, துரைசாமி ரெட்டியும், வெங்கடேச ரெட்டியும் சொத்துக்களை பரிவர்த்தனை செய்துள்ளனர். புல எண்கள் 139/12, 13, 14 ஆகிய சுய சம்பாத்தியச் சொத்துக்களை வெங்கடேச ரெட்டி, மனுதாரரின் தகப்பனார் துரைசாமி ரெட்டிக்கு கொடுத்துள்ளார். ஆனால் அதற்கான ஆவணம் எழுதப்படவில்லை. வருவாய் ஆவணங்கள் மட்டுமே உள்ளது. 1966ம் ஆண்டுவாக்கில் மனுதாரரின் தகப்பனார் துரைசாமி ரெட்டி வழக்கு சொத்தை கிரையம் பெற்று அசல் ஆவணங்களை 1ம் வாதியின் கணவரிடம் கொடுத்துள்ளார். எனவே, மனுதாரருக்கு முழு விவரமும் தெரியாது. வில்லங்கச் சான்று கேட்டு மனு செய்து இதுவரை கிடைக்கவில்லை.

(இ) மனுச் சொத்துக்களின் வருவாய் ஆவணங்கள் மனுதாரரின் தகப்பனார் பெயருக்கு மாற்றப்பட்டு மனுச் சொத்துக்களில் விவசாயம் செய்யப்பட்டு மனுதாரரரின் தகப்பனார் இன்றுவரை அனுபவித்து வருகிறார். இந்த மனுதாரர்கள் மனுச் சொத்தில் விவசாயம் செய்து அனுபவத்தில் வைத்துள்ளார்கள். மேலும் வெங்கடேச ரெட்டியிடமிருந்து மனுதாரரின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு வருவாய் ஆவணங்கள் மாறி உள்ளது. பழைய வருவாய் ஆவணங்களில் பட்டா மனுதாரரின் தகப்பனார் பெயரில் இருந்தது. தற்போது 1ம் வாதியின் கணவர் பெயருக்கு மாறியுள்ளது. அதை சாதகமாக எடுத்துக் கொண்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் அனுபவத்தில் இருப்பதை மறைத்து தற்காலிக உறுத்துக் கட்டளைப் பரிகாரம் பெறப்பட்டுள்ளது.

(ஈ) அடங்கல் பார்த்தாலே மனுதாரரின் அனுபவம் தெரியும். இந்த மனுவானது மனுச் சொத்தின் இயற்கை அமைப்பு, அனுபவம் வருவாய் ஆவணங்கள் மூலம் காட்ட தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்திலிருந்து வெளியேற்ற எதிர்மனுதாரர்கள் காவல்துறையில் மனு அளித்து அங்கு விசாரணை நடத்தப்பட்டு புல தணிக்கை செய்யப்பட்டு அவர்கள் மனுதாரர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே நீதிமன்ற ஆணையர், கிராம நிர்வாக அலுவலருடன் பார்வையிடுவதே இந்நீதிமன்றத்தில் உள்ள தற்காலிக உறுத்துக் கட்டளையை நீக்கரவு செய்வதற்கு ஒரே வழி ஆகும். இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.26 10:50:38 +0530

2. **மறுப்புரையின் சுருக்கம்:—**

(அ) பிரமாணப் பத்திரத்தில் கூறியுள்ள விவரங்கள் மறுக்கப்படுகிறது. பழைய ஆவணங்கள் வைத்து தற்காலிக உறுத்துக் கட்டளை வாதிகள் பெற்றார்கள் என்பதும் மனுதாரர்கள் உண்மையான உரிமையாளர்கள் என்பதும் சுத்த பொய். வெங்கடேச ரெட்டியும் துரைசாமியும் சொத்துக்களை பரிமாற்றம் செய்துக் கொண்டார்கள் என்பதும் மனுதாரரின் தகப்பனார் சில சொத்துக்களை வெங்கடேச ரெட்டியிடம் கிரையம் வாங்கினார் என்பதும் பொய். வருவாய் ஆவணங்கள் மனுதாரரின் தகப்பனார் பெயருக்கு மாற்றப்பட்டு அவரால் விவசாயம் செய்யப்பட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறுவது பொய்.

(ஆ) அனுபவத்தில் இல்லாமல் தற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் பெறப்பட்டதாக கூறியிருப்பது பொய். வாதிகள் தவறாக உறுத்துக் கட்டளைப் பெற்று மனுதாரர்களை வழக்கு சொத்திலிருந்து வெளியேற்ற முயற்சித்தாகவும், காவல்துறையில் புகார் அளித்ததாகவும் கூறுவது பொய். நீதிமன்ற ஆணையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மட்டும்தான் தாவா சொத்தின் உண்மையான அனுபவத்தில் இருப்பதை கண்டறிபவர்கள் என்று கூறுவது உண்மையில்லை. உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளில் அனுபவத்தை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது என கூறப்பட்டுள்ளது. மனுவில் எந்த நல்ல எண்ணமும் இல்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

3. **தீர்வுக்குரிய பிரச்சனை:—**

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. **தீர்வு:—**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்களால் தற்காலிக உறுத்துக் கட்டளைப் பெறப்பட்டுள்ளது என்றும் உண்மையில் இந்த மனுதாரர்கள்தான் மனுச் சொத்தின் உரிமையில் உள்ளார்கள் என்பதை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் அவசியம் என்றும் மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது. நிரந்தர உறுத்துக் கட்டளை வழக்கில் அனுபவத்தை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோர இயலாது என பல்வேறு மாண்புமிகு உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற தீர்ப்புகள் உள்ள நிலையில் மனுதாரர்கள் கோரும் பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என கூறி எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

5. அசல் வழக்கானது இந்த எதிர்மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. இம்மனுவின் மனுதாரர்கள் மனு சொத்தை பரிவர்த்தனை மூலமும் கிரையம் மூலமும் பெற்று அனுபவித்து வருவதாகவும் அனுபவத்தை நிர்ணயம் செய்ய கிராம நிர்வாக அலுவலருடன் நீதிமன்ற ஆணையர் பார்வையிடுவதை தவிர வேறு எந்த வழியும் இல்லை என கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதுவும்

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.26 10:50:52 +0530

சட்டவிரோதமான கட்டுமானங்கள் ஏற்பட்டதாகவோ அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாவோ இருதரப்பிலும் கூறவில்லை. வழக்கு சொத்தில் அனுபவத்தை நிர்ணயம் செய்ய நீதிமன்ற ஆணையர் கோர இயலாது என நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.26 10:51:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.09.26 10:51:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.